
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்



தொகுப்பு 7 தொகுதி 3 அக்டோபர் – டிசம்பர் 2017

R 5377

# இருளின் அதிபதியும், ஒளியின் அதிபதியும்

## PRINCE OF DARKNESS Vs PRINCE OF LIGHT

**ஆதார வசனங்கள்** : லூக்கா 11:14–26; 33–36.

**திறவுகோல் வசனம்** : "ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" – லூக்கா11:35

பிசாசு ஒரு தனிநபர் என்றும், அவன் பொல்லாத ஆவிகளடங்கிய சேனையின்அதிபதி எனவும், அவர்கள் தேவனுடைய அரசாட்சிக்கு விரோதமாக கலகம் செய்வார்கள் என்ற வேதாகம போதனையை உலக ஞானமானது ஏளனம் செய்தாலும், ஆதியாகமம் போதிக்கும் போதனை என எப்போதும் நாம் நினைவுகூறவேண்டும். உலக ஞானத்தில் உள்ள பிரச்சனை என்னவெனில் அதில் உள்ள நன்கு பகுத்தறியும் திறமைபடைத்தவர்கள், தேவனுடைய நல்வார்த்தையினால் வழிநடத்தப்படுபவர்களாக இல்லாததே காரணம். ஆவிக்குரிய ஜீவிகளாகிய தேவனும் அவருடைய ஊழியக்காரராகிய தேவதூதரும் மனித கண்ணுக்கு புலப்படாதவகையில் உள்ளதால், அவர்கள்மேல் போதுமானஅளவு நம்பிக்கை வைப்பது கடினம் என கூறுகின்றனர். அவ்வாறிருக்க, தேவனுடைய எதிராளியாகிய வேறொரு ஆவிக்குரிய அதிபதியையும், வேறொரு தூதர் சேனையையும் நம்புவது என்பது அவர்களுக்கு அதைவிட ஏற்றுக்கொள்ளமுடியாத கடினமாயிருக்கும். தேவன் தன்னையே எதிர்க்கும் நபர்களை உருவாக்கினார் என்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத விஷயம் என்பது அவர்களின் வாதம். அல்லது ஒருவேளை அவர்கள் பரிசுத்தமாக சிருஷ்டிக்கப்பட்டு, பின் நீதியின் எதிராளிகளாக மாறினர் எனவும், சர்வல்லமையுள்ள சிருஷ்டிகர் அவர்களை அழிக்காமல், அவரகளுடைய தீமையான எதிர்ப்புகள் தொடர்ந்து இருக்க அனுமதிக்கிறார் எனவும் நினைத்துப் பார்க்கக்கூடாததாயிருக்கிறது என்பதும் அவர்களின் வாதம்.

வேதாகமம் கூறுகிறபடி சாத்தானே முதன்முதலில் மீறுதல் செய்தவன். பெருமையினாலும் பேராசையினாலும், தேவனுக்கு முன்பாக உண்மையாக நடப்பதை விட்டுவிடும்முன்பு அவன் ஒரு கேருபினாக, உன்னத சுபாவத்தையும், ஸ்தானத்தையும் உடைய தேவதூதனாக இருந்தான். அவனால் வஞ்சிக்கப்பட்டு, கீழ்ப்படியாமற்போன வானதூதரின் சேனையை வேதாகமம் பொல்லாத ஆவிகளின் சேனை என அழைக்கிறது. மேலும் வேதத்தில் எங்கும் உள்ளபடி இவர்கள் எங்கோ தொலைதூரத்தில் இருந்துகொண்டு, மரித்த மனிதரை நெருப்பினால் வதைக்காமல், பூமியோடு மிகவும் தொடர்புடையவராக இருக்கின்றனர்.

வேதாகமம் சுட்டிக்காண்பிக்கிறபடி, தேவன் இவர்களைக்காட்டிலும் குறைவான வல்லமையுள்ளவராக இல்லாமல், கொஞ்சக்காலம் இவர்களை அனுமதித்திருக்கிறார். பாவத்தின் பலன்களாகிய கோபம், வன்மம், வெறுப்பு, பொறாமை, சண்டை முதலியவற்றை வெளிப்படுத்த அனுமதித்து, அவைகள் தூதர்களுக்கும் மனிதருக்கும் கற்றுக்கொள்ளும் பாடங்களாக வைத்திருக்கிறார். அப்போஸ்தலர் வருணிப்பதுபோல், "அந்தகார சங்கிலிகளினால்" வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குள்ளாக கட்டி வைத்திருக்கிறார். ஜலப்பிரளயத்துக்கு முன்பு அவர்கள் பெற்றிருந்த, மனித உருவெடுக்கும் சக்தியைப்பெற அனுமதி மறுக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் மனுக்குலத்தோடு உறவுகொள்ள ஆசைப்பட்டனர். எந்தஅளவுக்கு அவர்கள் மனிதர்மேல்

## இம்மாத வெளியீட்டில்


. இருளின் அதிபதியும் ஒளியின் அதிபதியும் ..... 11

.. யாரெல்லாம், எதற்காக ஜெபிக்கலாம் ? ....... 4

.. ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் .......... 7

.. நம் உக்கிராணத்துவத்தில் உண்மை ......... 12


*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

ஆட்கொண்டு வெற்றியடைகின்றனரோ அந்தளவுக்கு அவர்கள் அசுத்தஆவியினால் பீடிக்கப்ட்டவர்கள் என கூறலாம். அம்மனிதர் மேல் ஜெயம் பெற்றவுடன் பலிகடா ஆனவர் பேய்பிடித்தவர் அல்லது பைத்தியம் பிடித்தவர் எனக் கூறப்படுகிறார்.

மனநல காப்பகங்களில் உள்ளவர்களில் பாதிப்பேர் அசுத்தஆவி பிடித்தவர்கள் என கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வாறான அசுத்தஆவிகளே நமது கர்த்தருடைய ஊழியக்காலங்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. முற்காலங்களில் சூனியக்காரிகள், மந்திரவாதிகள், ஆவியுலக தொடர்புடையவர்கள் மூலமாக மனிதகுலத்தில் ஊடுருவினதுபோல, தற்காலத்திலும் குறிசொல்லும் எழுத்துப்பலகை, ஆவியுலக தொடர்ப்புப்பலகை மற்றும் ஆவி ஊடகங்கள்(spirit mediums) மூலம், மனுக்குலத்தின்மேல் ஊடுருவுதல் நடைபெறுகிறது. இருண்ட யுகங்களில் மனதில் ஆழப்பதியப்பட்டுள்ள பிசாசுகளின் உபதேசங்களானது(1தீமோ4:1), மரித்தவர்கள் நித்திரையிலிருக்கிறவர்கள், ஒன்றும் அறியார்கள் என்ற வேதத்தின் சாட்சிபகர்தலை(பிர9:5) நிராகரிக்கின்றனர்.

ஆயிரவருடயுகமாகிய கிறிஸ்துவின் நாள் என்கிற திரும்பக்கொடுத்தலின் காலங்களாகிய புதிய யுகத்தின் காலைப்பொழுதில் அவர்கள் எழுந்திருக்கும்வரை, "அவர்கள் யோசனைகளும் அழிந்துபோம்" என வேதத்தில் கூறப்பட்டுள்ளது(பிலிப்1:10; அப் 3:21). இன்றைய பாடமானது நமது குருவானவர் அசுத்தஆவி பிடித்தவனை அதிலிருந்து விடுதலையாக்குவதை அறிமுகம் செய்கிறதாயிருக்கிறது. ஜனங்கள் அம்மனிதனுடைய கஷ்டத்தை சரியாக புரிந்திருந்தனர். ஆனால் நமது ஆண்டவரை எதிர்க்கும் வண்ணமாக, இயேசுவே சாத்தானும் பெயல்செபூலின் தலைவனாக இருப்பதினால் பிசாசுகள் அவருக்கு கீழ்ப்படிகின்றன என சிலர் தீமையாக பழித்துரைத்தனர். வேறுசிலரோ,"உமது அற்புதங்கள் பூமிக்குரியவைகளாக இருக்கின்றன, பரலோகத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பியும்" என்றனர்.

அவர்களுடைய பழிச்சொல்லுக்கு பதிலளிக்கும் வண்ணமாக ; தான் ஒளியின் அதிபதியாக இல்லாமல், பிசாசுகளின் அதிபதியாயிருந்து, தன் சொந்தசேனையை துரத்தினால், தனக்குத்தானே பிரிந்திருந்து போர்செய்கிற கூட்டமாக, தனக்குத்தானே பிரிந்திருக்கிற சாத்தானுடைய வீடாக விரைவில் விழுந்துவிடும் என்பதையே அடையாளப்படுத்தும். ஆகவே சாத்தானே சாத்தானைத் துரத்தினால் அது முட்டாள்தனமாயிருக்குமே என்றும். இவ்விதமான வாதம் பலமற்றது என பதிலுரைத்தார். மேலும் இயேசு கூறும்போது, மற்ற யூதர் இவ்விதமாகவே பிசாசுகளை துரத்தும்போது, அவர்களை பிசாசுகளின் அதிபதிகள் என நீங்கள் குற்றஞ்சுமத்தவில்லை. மேலும் அநேகம்பேர் பிசாசுகளின் அதிபதிகளாக எவ்வாறு இருக்கமுடியும் ? எனக்கு விரோதமாக சொல்லப்படும் குற்றச்சாட்டை சரியா என மேற்சொன்னதைக்கொண்டே நிதானியுங்கள். ஆனால் அதற்கு மாறாக நான் தேவனுடைய வல்லமையாகிய அவருடைய விரலினால் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிற உண்மையை உணருகிறவர்களுக்கு, நான் பெற்றிருக்கிற இந்த வல்லமையும், என்னுடைய அப்போஸ்தலர் மூலமாக பயன்படுத்தும் இந்த வல்லமையும், தேவனிடத்திலிருந்து பெற்ற விசேஷமான வரம் என்பதில் எந்தவித சந்தேகமிராது. ஏனெனில் என்னுடைய இந்த சாட்சியானது மிக அருகாமையில் உள்ளது, அதாவது தேவனுடைய இராஜ்யத்தின் வல்லமையானது உங்கள் மத்தியில் வந்திருக்கிறதே என்று கூறுகிறார்.

ஆனால், உண்மையாகவே அவர்கள் ஒரு தேசமாக கிறிஸ்துவை எப்போது நிராகரித்தார்களோ, அவர்களுக்காக அளிக்கப்பட்ட இராஜ்யம் அவர்களிடத்திலிருந்து எடுத்துப்போடப்பட்டவுடன், அவ்வாய்ப்பு நிறுத்தப்பட்டது. இவ்விதமாக, கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தியானது வேறொரு இஸ்ரயேலரை சேகரிக்கும்வரை அதாவது, அவர்கள் யூதர்களில் உத்தம இஸ்ரயேலராகிய சிலரையும் பின்பு பரிசுத்தவான்களாகிய அதே வகுப்பாரை ஒவ்வொரு தேசங்களிலிருந்தும் சேர்க்கும்வரை, தேவனுடைய ஆதரவிலிருந்து ஒருகுறிப்பிட்ட காலம் விலக்கப்பட்டார்கள். அசுத்த ஆவிகளை துரத்துவதில் இயேசுவினுடைய வல்லமையானது எதைக்காட்டுகிறதென்றால், இருள் மற்றும் இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான்மேல் நடவடிக்கை எடுப்பதில் போதுமான தகுதியுடையவராயிருக்கிறார். மேலும் இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும் காலத்தில் சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் கட்டிப்போடும் அளவுக்கு போதுமானவராக உள்ளார். இருந்தபோதிலும் இயேசுவையும், இராஜ்யத்தையும் நிராகரித்தல் சம்பந்தமாக முன்னறிவிக்கப்பட்டதும், முன்னறிவின்படியும் சாத்தானை கட்டுதலின் வேலையானது ஆரம்பிக்கப்படாமல், கர்த்தருடைய இரண்டாம் வருகைவரை தாமதமாகும். இதற்கிடையில் அவருடைய மணவாட்டி வகுப்பார் இராஜ்யத்தின் உடன் சுதந்திரவாளிகளாக தேர்ந்தெடுக்கப்படும்போது, மாபெரும் அதிகாரத்தை எடுப்பார். அந்த சமயத்தில் சாத்தான் மற்றும் அவனுக்குக் கீழாய் இருக்கிற பொல்லாத ஆவிகளின் மீதும் நடவடிக்கை எடுப்பார். மாத்திரமல்ல, மனுக்குலமானது விழுந்துபோன நிலைமையில் அவர்களை தீவிரமான பிடியில் வைத்திருக்கும் பாவம் மற்றும் பிசாசின் ஆவியின்மேலும் நடவடிக்கை எடுப்பார்.

**சாத்தானைக் கட்டுதல்**

நம்முடைய கர்த்தர் உரைக்கும்போது சுவிசேஷயுக முடிவில் சாத்தான் ஜனங்களை இனிமேலும் மோசம் போக்காதபடிக்கு 1000 வருடம் கட்டப்படுவான்(மேசியாவின் மகிமையுள்ள இராஜ்யத்தில்). ஏனெனில் கடந்த 6000 வருட

காலங்களாக அவர்களை ஏமாற்றியும் வஞ்சித்தும், வெளிச்சத்துக்கு பதிலாக இருளையும், பிதாவாகிய தேவனை தவறாக போதித்தும் வந்திருக்கிறான். அவர் கோடிக்கணக்கான ஜனங்களைப் படைத்து, பின் அவர்கள் நித்திய வேதனைக்கு செல்லவேண்டுமென முன்குறித்து சதித்திட்டம் தீட்டியிருக்கிறார் எனவும், அந்த வகையில் அவரே உள்ளதிலேயே மிகவும் மோசமானவராக அவதூறு பரப்பியிருக்கிறான்.

தற்காலத்தில் இவ்வுலகின்மேல் சாத்தான் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறான் என்பதை இயேசு காண்பிக்கும்போது, பலவான் எனவும் தன்னுடைய வீட்டை எல்லா காவலோடும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான் எனவும் கூறுகிறார். அவனைவிட பலங்கொண்டவர் வந்து அவனை மேற்கொள்ளும்வரை, தான் தவறான முறையில் அபகரித்துக்கொண்ட உடைமைகளை தன்னிடம் தக்கவைத்துக் கொள்வான். இதன் பலனாக, கடந்த 1000 வருடங்களடங்கிய ஒவ்வொரு மாபெரும் நாளாக 6 நாட்கள் மனுக்குலத்தின் மேலிருந்த பாவ மரண சாபத்திலிருந்து விடுதலை கிடைக்கும். மாபெரும் ஓய்வுநாள் அல்லது 7வது நாளில் மேசியாவின் இராஜ்யம் இருக்கும்போது, அனைவரும் இரட்சகரை ஏற்றுக்கொண்டு இளைப்பாறுதலில் பிரவேசிப்பர்.

இதற்கிடையில், பிதாவினுடைய சித்தத்தின்படி, இந்த சுவிசேஷயுகத்தில், தன்னுடைய மற்றும் அப்போஸ்தலருடைய செய்தியின்படியும், இயேசுவானவர் தமக்கென்று ஒரு மணவாட்டி வகுப்பாரை இராஜ்யத்தில் தன் உடன்சுதந்திரவாளிகளாக இருக்கும்படி இவ்வுலகத்திலிருந்து கூட்டிச்சேர்ப்பார். இவ்வகுப்பாரது உண்மைத்தன்மையை சோதிக்கும்படிக்கு குறிப்பிடத்தக்க அளவு சுயாதீனம் சாத்தானுக்கு தரப்பட்டுள்ளது. ஒருவருக்கு இரு எஜமானர்களே இருக்கமுடியும். அறிந்தோ அறியாமலோ ஜனங்கள் இதில் யாராவது ஒருவருக்கே ஊழியம் செய்கின்றனர். இயேசு கூறுவதுபோல்; ''என் பட்சமாயிராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான்''.

**முழு உலகமும் அலைக்கழிக்கப்படுகின்றனர்**

அப்.பவுல் கூறும்போது, இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தான் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் இருதயத்தில் கிரியை செய்கிறான் என பிரகடனம் செய்கிறார். இதே யோசனையை இயேசு கூறும்போது, சாத்தானுடைய பிடியிலிருந்து தன்னால் விடுவிக்கப்பட்டவர்கள்கூட, உலகத்தினர்போலவே குறைந்தபட்சம் பேய்த்தனமானவர்களாகவே இருக்கின்றனர். அதேபோல கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். ஆகவே சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக'' – ரோமர் 6:12.

தேவனுடைய கிருபையைப் பெற்று பாவங்கள் மன்னிக்கப்பட்ட இப்படிப்பட்டவர்களைப் பற்றி இயேசு கூறும்போது, அவர்கள் இருதயங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, அழகுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் அவர் கூறும்போது, அப்படிப்பட்டவர்களை மறுபடியும் சாத்தானானவன் ஆதிக்கம் செலுத்தும்பொருட்டு, உலகத்தின் ஆவியாகிய பெருமை, கோபம், பொறாமை, வெறுப்பு, சண்டைகள், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியை மூலம் தன் கட்டுப்பாட்டில் வைக்க முற்படுவான்(மத் 12:43–45). ''விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்'' என்று அப்போஸ்தலர் எழுதுகிறார்–1பேதுரு5:9. நாம் சாத்தானை எதிர்த்து நிற்காதிருந்தால், தேவனை அறிகிற அறிவினால் பெற்றிருக்கிற வெளிச்சமும், ஆசீர்வாதமும், பின் சாபமாகவும், சுயத்தை வருவிக்கிறதான அபாயத்தைத் தரும். அதன் விளைவு என்னவெனில், கிறிஸ்துவோடுகூட உறவுக்குள் வருவதற்கு முன்பிருந்த நிலைமையைக் காட்டிலும் அந்நபருடைய பின்னிலைமை அதிக கேடுள்ளதாக இருக்கும்.

இயேசு வலியுறுத்தும்போது, விளக்கைக் கொளுத்தி, மரக்காலால் மூடிவைக்காமல், நன்மை ஏற்படும்விதமாக அது வெளியரங்கமாக வைக்கப்படவேண்டும். அதேபோல சத்திய வெளிச்சமும், தேவனால் பெற்றிருக்கிற கிருபையும் மூடி வைக்கப்படாமல் தேவனுடைய மகிமைக்காக ஒளிவீசப்படவேண்டும். இல்லையெனில் அந்த வெளிச்சம் அணைக்கப்பட்டு இருள் சூழ்ந்துகொள்ளும். கண் புத்திக்கூர்மையைக் குறிக்கிறது. உண்மையான வெளிச்சம் அல்லது புத்திக்கூர்மையை பெற்றிருக்கிறவரைக்கும் முழு சரீரமும் அதன்மூலம் ஆசீர்வதிக்கப்படும். ஆனால் அந்தஅறிவு அழிக்கப்படாமல், அதாவது கண்ணானது குருடாகிப்போனால் முழு சரீரமும் இருளாகி வேதனைப்படும். ஆக, வெளிச்சத்தைப் பெற்றிருக்கிற ஒவ்வொருவரும் அதை விசேஷமானதாகக் கருதி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இல்லையெனில் அதை அவன் இழந்து இருளடைவான். கண் அல்லது வெளிச்சம் இங்கே பரிசுத்தஆவியினால் வெளிச்சமாக்கப்பட்டதைக் குறிக்கிறது. ஏனெனில் அது நம்மை ஆசீர்வதிக்கிற மாபெரும் வல்லமையானதாகும். இது இழக்கப்படுமானால் கர்த்தரை அறிகிற அறிவிற்குள்ளாக வருமுன் இருந்ததைக்காட்டிலும் அதிகமான இருளுக்குள்ளாக போகும் அனுபவத்தை நாம் பெறுவோம்.

---

